**செய்தி வெளியீடு எண்: 06/01/2021** **நாள்: 22.01.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (22.01.2021) கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சி நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது மக்களுக்கும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ இரயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அகரம் கலைக் குழுவுடன் இணைந்து இன்று (22.01.2021) இரவு 07:00 மணி முதல் 07:50 மணி வரை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கான நாடகம் நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

**இதனைத் தொடர்ந்து,**

வருகின்ற 25.01.2021 (திங்கள்கிழமை) காலை 08:30 மணி முதல் 09:30 மணி வரை வண்ணாரப்பேட்டை மெட்ரோவிலிருந்து விமான நிலையம் மெட்ரோ (ஏஜி-டி.எம்.எஸ் வழியாக) மற்றும் விமான நிலையம் மெட்ரோவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ (கோயம்பேடு வழியாக) செல்லும் மெட்ரோ இரயிலில் அகரம் கலைக் குழுவின் பொம்மலாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**